# நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ

## முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம்

### உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்ட முகாமைத்துவம்

- *இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்கள்*

**Classification: Public**

## முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம் – இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்கள்

| விளைபொருள் / சேவை | எவையேனும் ஊக்கத் தொகைகள் மற்றும் மேம்பாடுகள் உட்பட நிதிசார் மற்றும் வேறு நன்மைகள் | கட்டணங்கள்/விதிப்பனவுகள், தரகுப்பணம்,வட்டி, | விளைபொருள் / சேவையைப் பெறுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, முக்கிய ஆபத்துக்கள் | பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் |
|---|---|---|---|---|
| **இலத்திரனியல் வங்கிக் கூற்றுச் சேவை** | • கடவுச்சொற் பாதுகாப்புடன் உத்தரவாதமளிக்கப்பட்ட பாதுகாப்பு<br>• NDB வங்கியில் உள்ள உமது எல்லா விளைபொருட்களும் பற்றிய ஒரு மேலோட்டத்தைக் காண்பிக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட இலத்திரனியல் வங்கிக் கூற்றொன்றைப் பெறுதல்.<br>• மாதாந்த சேமிப்புக்களும் செலவுகளும் பற்றிய வரைபுசார் விவரணம்<br>• இலத்திரனியல் வங்கிக் கூற்றை விளங்கிக்கொள்வது இலகு<br>• உமது சொந்த நிதிப் பகுப்பாய்வை மேற்கொள்ளும் செயற்திறன்<br>• கொடுக்கல்வாங்கல்வாரியான விபரங்களை சித்தரிக்கும் தனிநபர் கணக்குகளின் இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்கள் | • விதிப்பனவுகள் எதுவும் ஏற்புடையதாகாது | • ஏற்கனவே கணக்கு வைத்திருப்பவர்கள் அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் அல்லது மிக அருகிலுள்ள கிளைக்குச் சென்று பதிவு செய்ய முடியும் என்பதுடன் அச்சேவைக்குப் பதிவதற்கான இலத்திரனியல் வங்கிக் கூற்றையும் பெற முடியும்.<br>• நீங்கள் வங்கியில் உமது கணக்கைத் திறக்கும் நேரத்திலும் பதிவுசெய்யலாம். | 1. வாடிக்கையாளர்கள் தமது குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பாவர்.<br>2. வாடிக்கையாளர்கள் 24 மணி நேர அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் தமது குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியை மாற்றிக்கொள்ள முடியும்.<br>3. மின்னஞ்சல் முகவரியை இற்றைப்படுத்தியதாக வைத்திருத்தல் இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்கள் உரிய பெறுநரைச் சென்றடைகின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றது.<br>4. இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்களைப் பார்வையிடுவதற்கு, வாடிக்கையாளர்களுக்கு Adobe Acrobat பதிப்பு 6 அல்லது அதற்குப் பிந்தியது தேவைப்படுகின்றது.<br>5. வாடிக்கையாளர்கள் இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்களுக்கு குறிக்கப்பட்ட தமது மின்னஞ்சலை கிரமமாக சரிபார்த்தல் வேண்டும்.<br>6. இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்கள் வழங்கப்பட முடியாவிடின், வங்கியானது வாடிக்கையாளரின் கோரிக்கையின் மேல் காகித வங்கிக் கூற்றுக்களை வழங்கலாம்.<br>7. வங்கிக் கூற்று இடைவெளி மாதாந்தமாகும் என்பதுடன் ஒவ்வொரு மாதத்தினதும் கடைசி நாளன்று வழங்கப்படுகின்றது.<br>8. வாடிக்கையாளர்கள் தமது இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்களை உடனடியாகப் பார்வையிடுதல் வேண்டும். எவையேனும் பிழைகள், ஒத்திசையாமைகள், அல்லது அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள் இருப்பின் அவை +94 112 448888 என்ற இலக்கத்தினூடாக வங்கியின் அழைப்பு மையத்துக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 9. வங்கியானது ஒருபோதும் கணக்கு அல்லது பாதுகாப்பு விபரங்களை மின்னஞ்சலில் கோருவதில்லை.<br>10. வங்கியானது இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்களின் அனுப்புகையின் போதான பாதுகாப்புக்கு முயற்சி செய்கின்ற அதேவேளை, தொடர்பாடல் அல்லது வலையமைப்புக் கோளாறுகள் காரணமாக இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்களிலான தடங்கல்கள், கிடைக்கக்கூடியதற்ற தன்மை அல்லது தாமதங்களுக்கு அது பொறுப்பாதலாகாது.<br>11. வங்கியானது அதன் விளைபொருட்கள் மற்றும் சேவைகளை இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்களினூடாக காலாகாலம் விளம்பரப்படுத்தலாம்.<br>12. வங்கியானது, வங்கியின் இணையத்தளத்தில் முன்னறிவித்தலை வழங்குவதன் மூலம் வங்கியின் விருப்பப்படி காலத்துக்குக் காலம் விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் நியதிநிபந்தனைகளையும் மாற்றுவதற்கான / திருத்துவதற்கான / மாற்றஞ்செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. இச்சேவையைப் பயன்படுத்துவதானது இந்நியதிநிபந்தனைகளுக்கு வாடிக்கையாளர் உடன்பட்டதாகவும் அவற்றைப் பெற்றுக்கொண்டதாகவும் மின்னஞ்சல் மூலம் இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்களை அனுப்புவதில் உள்ள உள்ளார்ந்த ஆபத்துக்களை ஒப்புக்கொண்டதாகவும் கருதப்படும்.<br>13. மேலதிக விபரங்களுக்கு NDB வங்கிக் கூட்டாண்மையின் இணையத்தளத்தில் ‘பதிவிறக்கங்கள்’ என்ற பிரிவில் ‘இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்கள்’ என்பதன் கீழ் கிடைக்கக்கூடியதாகவுள்ள நியதி நிபந்தனைகளைப் பார்வையிடவும். |

**உமது பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்**

எமது சேவைகளை எல்லா நேரங்களிலும் நீங்கள் திருப்திப்படும் வகையில் வழங்குவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.
உமது எதிர்பார்ப்புக்களை நாம் எவ்வளவு சிறப்பாக பூர்த்தி செய்கின்றோம் என்பதை அறியவும் அவசியமாகின்றவிடத்து சீராக்கல்களைச் செய்வதற்கும் உமது பின்னூட்டம் எமக்கு உதவிபுரியும்.

**உமது பின்னூட்டங்களை எவ்வாறு பகிர்ந்து கொள்வது:**

உமது வங்கிக் கிளை முகாமையாளரை (வங்கிக் கிளை தொடர்பு விபரங்கள்) அல்லது உமது தொடர்பு முகாமையாளரை நீங்கள் தொடர்புகொள்ளலாம்

+94 (0) 11 2448888 என்ற இலக்கத்தினூடாக 24 மணி நேர அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்ளவும்.

எமது மின்னஞ்சல் முகவரி: contact@ndbbank.com

முகாமையாளர், வாடிக்கையாளர் தொடர்பு முகாமை, நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ, இல.40, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு எழுதவும்.

**நாம் எவ்வாறு பதிலளிப்போம்:**

முறைப்பாடொன்றைப் பெறுவதன் மேல், வங்கியின் முறைப்பாட்டைக் கண்காணிக்கும் முறைமையில் பதிவுசெய்து அது பற்றிய விடயத்தை உடனடியாகத் தீர்ப்பதற்கு முயற்சி செய்வோம். எம்மால் அவ்வாறு செய்ய இயலாமலிருக்கின்ற பட்சத்தில், மூன்று வேலை நாட்களினுள் தீர்வொன்றை நாம் உமக்கு வழங்குவோம். முறைப்பாட்டின் தன்மை காரணமாக, இக்காலப் பிரிவினுள் எம்மால் தீர்க்க முடியாவிடின், உத்தேச பதிலளிப்பு நேரமொன்றை நாம் உமக்குத் தெரிவிப்போம்.

உமது கரிசனைக்கான எமது பதிலில் நீங்கள் முழுமையாகத் திருப்தியுறாத பட்சத்தில், இலங்கை நிதி குறைகேள் அதிகாரி அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம்.

**திரு. ஆனந்த குமாரதாச**
நிதி குறைகேள் அதிகாரி
நிதி குறைகேள் அதிகாரி அலுவலகம்
143ஏ, வஜிர வீதி
கொழும்பு 05
**தொடர்பிலக்கம்:** +94 11 259 5624
**தொலைநகல்:** +94 11 259 5625
**மின்னஞ்சல்:** fosril@sltnet.lk
**இணையத்தளம்:** www.financialombudsman.lk